தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 8, திருவள்ளுவர் ஆண்டு–2045

2014 ஜூலை 24, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை."

உண்பவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை விளைவிப்பதற்கு உதவுவதுடன், உண்டபின் பருகுவதற்கும் உணவாகப் பயன்படும் சிறப்பினை உடையது மழை நீர்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 240, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

240—

சொந்தக் கட்டடம்

***43490—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, மங்களம் கிராம ஊராட்சி, மங்களம் கிராமத்திலுள்ள மின்சார வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, மங்களம் கிராம ஊராட்சி, மங்களம் கிராமத்தில் தற்போது உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் அலுவலகங்கள் 1,225 சதுர அடி பரப்பளவில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. போக்குவரத்து வசதி அதிகம் உள்ள சோமனூர் சாலையில் இந்த அலுவலகங்கள் அமைந்துள்ளன. மின் நுகர்வோர் மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கு மேற்கண்ட இடம் தற்போது வசதியாக உள்ளது. மேற்கண்ட அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கும்பொருட்டு, தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அல்லும், பகலும் கண் துஞ்சாது உழைத்து, தமிழக மக்கள் நலன் ஒன்றே குறிக்கோளாய் ஏற்று, நல்வாழ்வுத் திட்டம் பல தீட்டி, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

பல்லடம் தொகுதிக்குட்பட்ட 42 மின்சார அலுவலகங்களில் 11 மின்சார வாரிய அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 31 அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. இவற்றிற்கு விரைவாக சொந்தக் கட்டடங்களைக் கட்டித் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், பல்லடம் தொகுதியில் காற்றாலை மின்சாரம் அதிகப்படியாக உற்பத்தி செய்யப்படுகிறது.

2014 ஜூலை 24]

வாரத்தில் 2 நாட்கள், 3 நாட்கள், இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் என்று ஒரு சில நாட்களில், சில வழித்தடங்களில் காற்றாலையில் உற்பத்தியாகும் மின்சாரத்தை நிறுத்தி வைக்கிறார்கள். அதை 24 மணி நேரமும் தொடர்ந்து அரசு எடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பணிவோடு கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட முதல் கேள்விக்கு விடை, கோயம்புத்தூர் மாவட்டத்தில் மொத்தம் 363 பிரிவு அலுவலகங்களும், 81 உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களும் இருக்கின்றன. இவற்றில் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் பிரிவு அலுவலகங்கள் 200. மீதி இருக்கின்ற 163 பிரிவு அலுவலகங்களுக்கும், வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற 31 உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கும் தகுந்த இடங்கள் கிடைக்குமேயானால், அவற்றைக் கையகப்படுத்தி சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசால் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பல்லடம் தொகுதி, மங்களம் ஊராட்சி, மங்களம் கிராமத்திலுள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என்றார். தற்போது அதற்குத் தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஒத்துழைப்போடு, அந்தப் பகுதியிலே சொந்தக் கட்டடங்கள் கட்ட தேவையான இடத்தைக் கண்டறிய அவரும் உதவுவாரேயானால், விரைவாக வாடகைக் கட்டடங்களிலே இயங்குகின்ற அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் உரிய நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 24

முற்பகல் 10–05

அடுத்தபடியாக, மற்றொரு கேள்வியைக் கேட்டார்கள். இங்கே தற்போது காற்றாலை மின் சாதனங்கள் மூலமாக உற்பத்தி செய்யக்கூடிய இடங்களில், ஒரு சில நாட்களில் சில மணி நேரங்கள் உற்பத்தி நிறுத்தி வைக்கப்படுகிறது; break down *செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். நான் இதுகுறித்து ஏற்கெனவே மானியக் கோரிக்கைமீதான விவாதத்திற்கான பதிலுரையில் சொல்லியிருக்கிறேன். மீண்டும் ஒருமுறை சொல்கிறேன். காற்றாலை மின் உற்பத்தியினைப் பொறுத்தவரையில், ஒரு சில நேரங்களைத் தவிர, தேவையான அனைத்து நேரங்களிலும் கொள்முதல் செய்யப்படுகின்றது. பொதுவாக காற்றாலை மின்சார உற்பத்தியில், நிலையான மின்சாரம் கிடைப்பதில்லை. உதாரணத்திற்கு காலை நேரங்களிலே 400 மெகாவாட், 500 மெகாவாட் என்ற அளவில் உற்பத்தி இருக்கும். மதிய நேரங்களில் 1,000 மெகாவாட், 1,500 மெகாவாட் என்ற வகையில் உற்பத்தி இருக்கும். இரவு நேரங்களிலே ஏறத்தாழ 4,000 மெகாவாட் என்ற அளவில் உற்பத்தி இருக்கும். ஆகவே, அனல் மின் நிலையங்கள், புனல் மின் நிலையங்கள் அல்லது வாயு மின் களங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைப்போல, ஒரு நிலையான, உறுதியான மின்சாரம் கிடைப்பதில்லை. ஆகவே, அதை நம்பி முழுமையாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. அதனால் காற்றாலை மின்சார உற்பத்தி குறைகின்ற நேரத்தில், அந்தப் பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்காக மின்சாரம் கொள்முதல் செய்யவேண்டியிருக்கின்றது. அப்படிக் கொள்முதல் செய்யும்போது, சில மணி நேரத்திற்காக அதைச் செய்ய முடியாது. மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில், தொடர்ந்து உற்பத்தி செய்ய முடியுமே தவிர, நீர் மின் உற்பத்தியைத் தவிர மற்றவற்றை உடனுக்குடன் நிறுத்துவதும், உடனுக்குடன் தொடங்குவதும் தொழில்நுட்ப ரீதியாக சாத்தியம் இல்லை. ஆகவேதான், அதைக் கொள்முதல் செய்தால், தொடர்ந்து 24 மணி நேரமும் கொள்முதல் செய்யவேண்டும். ஆகவே, பற்றாக்குறை நேரங்களில் கொள்முதல் செய்யும்போது, மாலை மற்றும் இரவு நேரங்களில் காற்றாலை மின்சார உற்பத்தி கூடுதலாக வரும்போது, அதைத் தவிர்க்கமுடியாமல் நிறுத்தி வைக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அப்படிச் செய்யவில்லை என்று சொன்னால், காலை நேரங்களில் மக்களுக்குத் தேவையான மின்சாரம் வழங்க இயலாது.*

2014 ஜூலை 24]

அந்த ஒரு சில நேரங்களில் மின்வெட்டை அமல்படுத்தவேண்டிய கட்டாயம் ஏற்படும். ஆகவேதான், மக்களுக்கு 24 மணி நேரமும் தொடர்ந்து தடையில்லா மின்சாரம் வழங்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டதன் காரணமாக, காலை நேரங்களில் ஏற்படுகின்ற பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக, கொள்முதல் செய்யப்படும் மின்சாரத்தை இரவு நேரங்களில் நிறுத்த முடியாது என்ற காரணத்தினால், காற்றாலை மின்சாரத்தினை இரவு நேரங்களில் முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை. ஒரு மனிதனுக்கு low pressure 80–க்கு கீழே போனாலும் ஆபத்து, high pressure 120–க்கு மேல் போனாலும் ஆபத்து. High pressure-ம் வரக்கூடாது, அதுபோல் Low pressure-ம் வரக்கூடாது. அதுபோல் மின்சாரத்தைப் பொறுத்தவரையில், மின்சாரத்தின் அதிர்வு எண் 49.7 Hertz–லிருந்து 50.2 Hertz–க்கு அதன் அதிர்வு எண்ணை maintain செய்யவேண்டும். மின்சாரம் வழங்கும்போது அதன் அதிர்வு எண் 49.7 Hertz–க்குக் கீழே போகக்கூடாது. அதுபோல் 50.2 Hertz–க்கு மேல் போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இதுபோன்ற தொழில்நுட்பரீதியில்தான் தரமான மின்சாரம் வழங்க முடியும். அந்தத் தொழில்நுட்ப ரீதியில் மின்சார அதிர்வு எண்ணை சரிப்படுத்துவதற்காக, நிலைப்படுத்துவதற்காக சில நேரங்களில் மின்சார உற்பத்தி அதிகமாக வந்தால், 50.2 Hertz–க்கு மேல் அந்த மின் அழுத்தம் வரும்போது, அங்கே கூடுதல் மின் உற்பத்தியைத் தடுத்து நிறுத்த வேண்டும். 49.7 Hertz–க்கு கீழே வரும்போது மின்வெட்டை அமல்படுத்தவேண்டும். ஆகவே, ஏதேனும் ஒரு நடவடிக்கையை எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுவதால் மின்வெட்டை அமல்படுத்துவதற்குப் பதிலாக, கூடுதலாக மின்சாரத்தை கொள்முதல் செய்து பயன்படுத்த முடியாத நிலையில், அங்கே அது நிறுத்தப்படுகிறது. ஆகவேதான், மின்சார அதிர்வு எண்ணை நிலைப்படுத்துவதற்காக சில நேரங்களில் தேவைக்கு அதிகமாக மின்சாரம் வரும்போது, அது 50.2 Hertz–க்கு மேல் போகக்கூடாது என்பதற்காக தொழில்நுட்ப ரீதியிலான காரணங்களினால் அந்தக் காற்றாலை மின்சார உற்பத்தியை எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை வருகிறது.

முற்பகல் 10–10

அதுவும் எப்பொழுது என்றால், அதிகமாக இருக்கின்ற நேரத்திலே மட்டும் எடுத்துக்கொள்ள முடியாது. ஆகவேதான்,

[2014 ஜூலை 24

இப்படிப்பட்ட நேரங்களில், தவிர்க்கமுடியாத தொழில்நுட்பக் காரணங்களாலும், மின்வெட்டே இல்லாத சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்களே அதை உறுதிப்படுத்துவதற்காகவும், மின்சாரத்தைத் தொடர்ந்து வழங்குவதற்காகவும், சில நேரங்களிலே கூடுதல் உற்பத்தி வருகின்றபொழுது மட்டுமே அது நிறுத்தப்படுகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, வருங்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்தில் ஒரு யூனிட்கூட வீணாகக் கூடாது என்பதற்காகவும் கூடுதல் மின்சாரத்தை அப்படியே இங்கே நாம் எடுத்து உபயோகித்துக் கொள்ளவும், தேவையானால் அதை மற்ற மாநிலங்களுக்கும்கூட விற்பனை செய்வதற்காகவும் அல்லது அதை வேறுவழியில் பயன்படுத்திக்கொள்வதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இதைப் பயன்படுத்தும் வகையிலே, கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அதற்கு வேண்டிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. ஆகவேதான் தேவைக்கு மேல் கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதற்கு, அதை எடுத்துச் செல்வதற்கு, மின்சார வழித்தடங்களை போதுமான அளவிற்கு கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உருவாக்காததன் விளைவாக, அந்த மின்சாரத்தை evacuate செய்ய முடியவில்லை. எடுத்துக்கொள்ள முடியவில்லை. அதையறிந்துதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இப்பொழுது காற்றாலை மின்சார உற்பத்தியை மட்டுமல்ல, அறிவிக்கப்பட்டிருக்கின்ற புதிய மின் திட்டங்களிலிருந்து வருகின்ற மின்சாரம் அனைத்தையும் இன்றைக்கு முறையாக எடுத்து, முழுவதையும் பயன்படுத்திட உரிய வழித்தடத்தை உருவாக்கி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அனைவருக்கும் விநியோகம் செய்வதற்காக காற்றாலை மின்சார உற்பத்தியை எடுத்துச் செல்வதற்கென்று பிரத்யேகமாக இரண்டு வழித்தடங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஒரு வழித்தடம் இப்பொழுது ஏறத்தாழ முடிகின்ற நிலையிலிருக்கிறது. மற்றொரு வழித்தடத்தில் இப்பொழுது பணிகள் நடைபெற்று வருவதால், அவை முடிந்தவுடன் கூடுதல் மின்சாரத்தையும் முழுமையாக நாம் பயன்படுத்த முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடம் கட்டித் தருகிறேன் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கூடுதலாகக் கேட்ட கேள்விக்கு விரிவான, தெளிவான பதிலைத் தந்து விளக்கமளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 241, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

241—

சுற்றுச் சாலை

***3597—திரு. வி.சி. சந்திரகுமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் சுற்றுச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஈரோடு வெளிவட்டச்சாலை என்றழைக்கப்படும் சுற்றுச் சாலையைப் பொறுத்தவரையில் தற்போது 2 பகுதிகள் முடிவுற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திறக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. மூன்றாம் பகுதிக்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று